# கத்தோலிக்க ரஷ்யா ஆர்த்தடாக்ஸ் பிரதிநிதிகள் சந்திப்பு

மத்திய கிழக்குப் பகுதியில் வாழும் கிறிஸ்தவர்களின் பாதுகாப்பு என்ற கருத்தை மையப்படுத்தி, கத்தோலிக்க திருஅவை மற்றும் ரஷ்ய அர்த்தடாக்ஸ் சபை பிரதிநிதிகள், பிப்ரவரி 12 ஆம் தேதி வியென்னாவில் சந்திதுத், ஒரு சில ஒப்பந்தங்களை நிறைவேற்றினர் என்று ஆசிய செய்தி கூறியுள்ளது.

2016 ஆம் ஆண்டு, பிப்ரவரி 12 ஆம் தேதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சபையின் உலகத் தலைவர், முதுபெரும்தந்தை கிரில் அவர்களும் கியூபா நாட்டின் தலைநகர், ஹவானாவில் சந்தித்து நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிறைவாக, இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கத்தோலிக்க திருஅவை பிரதிநிதிகள் குழுவின் தலைவராக, கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் கர்ட் கோக் அவர்களும், ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சபை பிரதிநிதிகள் குழுவின் தலைவராக, மாஸ்கோ சபை வெளியுறவுத் துறையின் தலைவர் ஹிலேரியன் ஆல்பீஸ் அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மத்தியக் கிழக்குப் பகுதியில் துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு உதவிகள் செய்ய, அப்பகுதியில் உள்ள அரசியல் தலைவர்களின் ஒத்துழைப்பும் தேவை என்பதை, இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த வியென்னா பேராயர் கர்தினால் கிறிஸ்தோப் ஸ்கோன்பான் தன் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.


2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதி திருத்தந்தை பிரான்சிஸ் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சபை முதுபெரும்தந்தை கிரில் சந்தித்தபோது...

# சோம்பல், வாழ்வு மீதுள்ள சுவையை இழக்கச் செய்யும்


அரிச்சா நகர் தெய்வீகப் போதகர் தியான இல்லத்தின் தியான அறை

சோம்பல், தாகத்திற்கு எதிரானது. இது வாழ்வு மீதுள்ள சுவையை இழக்கச் செய்யும் என்று சென்ற வாரம் தியானச் சிந்தனைகளை வழங்கினார் அருள்தந்தை ஜோஸ் தோலன்டினோ டி மெண்டோன்கா அவர்கள்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும், திருப்பீடத் தலைமையக அதிகாரிகளுக்கும் தியான உரைகளை ஆற்றிவரும் அருள்தந்தை மெண்டோன்கா அவர்கள், வழங்கிய முதல் தியான உரையில், சோம்பல், சிலவேளைகளில் நம்மைத் தாக்குகின்றது மற்றும், நோயுற்றவர்களாக ஆக்குகின்றது. சோம்பல் அடிப்படையில் தாகத்திற்கு எதிரானது என்றும் கூறினார்.

நாம் தாகத்தை விட்டுவிடும்போது, நாம் இறக்கத் தொடங்குகின்றோம் என்றும், நாம் ஆசையை விட்டுவிடும்போது, சந்திப்புகள், உரையாடல்கள், பரிமாற்றங்கள், தன்னையே விட்டுவிடுதல், திட்டங்கள், வேலை, செபம் ஆகியவற்றில் சுவையைக் கண்டு கொள்கிறோம் என்றும், தியான உரையில் கூறினார் அருள்தந்தை மெண்டோன்கா அவர்கள்.

பிறர் காரியங்களில் தலையிடுகின்ற குணம் குறையும்போது, நமது திறந்த மனம் பரந்து விரிகின்றது என்றும் உரைத்த அருள்தந்தை மெண்டோன்கா அவர்கள், தளர்ச்சியடைந்த நிலையில், மருந்துகளால் மட்டும் குணமடைவதில்லை என்றும் உரைத்தார்.

யோனா, யாக்கோபு, பணக்கார இளைஞர் ஆகிய விவிலிய மனிதர்கள் பற்றியும் மேற்கோள்காட்டி விளக்கிய அருள்தந்தை மெண்டோன்கா அவர்கள், இயேசு போன்று அன்பு செலுத்துமாறும், இயேசுவின் பாடுகளில் ஒன்றித்திருக்குமாறும் கூறினார்.

வத்திக்கான் நகருக்கு 16 மைல் தூரத்தில் அமைந்துள்ள, அரிச்சா நகர் தெய்வீகப் போதகர் தியான இல்லத்தில், திருத்தந்தைக்கும், திருப்பீடத் தலைமையக அதிகாரிகளுக்கும் ஆண்டு தியானத்தை வழி நடத்தி வருகிறார் அருள்தந்தை மெண்டோன்கா அவர்கள்.

# சீனாவில் 2017 இல் திருமுழுக்குப் பெற்றவர்களின் எண்ணிக்கை 48,000க்கும் மேல்


திருப்பலியில் கலந்து கொள்ளும் சீன விசுவாசிகள்

சீனாவில் 2017 ஆம் ஆண்டில் 48,556 பேர் புதிதாக திருமுழக்குப் பெற்றுள்ளார்கள் என்று, சீன புத்தாண்டை முன்னிட்டு, புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது விசுவாச கலாச்சார கழகம். மிகவும் ஒதுக்குப் புறங்களில் வாழ்கின்ற கத்தோலிக்கர் குறித்த விவரங்கள் கிடைக்காததால், இந்தப் புள்ளி விவரங்கள் முழுமையாக இல்லை என்று, அக்கழகம், பிடேஸ் செய்திக்கு அனுப்பிய தகவலில் குறிப்பிட்டுள்ளது.

சீனாவில் கத்தோலிக்கர் அதிகமாக வாழ்கின்ற ஹே பெய் மாநிலத்தில், முதல் முறையாக இவ்வளவு பெரிய எண்ணிக்கையில், அதாவது 11 ஆயிரத்து 899 பேர், 2017 ஆம் ஆண்டில் திருமுழுக்குப் பெற்றுள்ளனர் என்றும் அக்கழகம் கூறியுள்ளது.

இந்த எண்ணிக்கை ஊக்கமளிப்பதாய் இருந்தாலும், சீனாவில் நற்செய்தி அறிவிப்புப்பணியை ஆற்றுவது, கடினமாகவே உள்ளது என்று கூறியுள்ள அக்கழகம், சீனாவில் அனைத்து கத்தோலிக்கரும், பங்குத்தளங்களும், தாங்கள் பற்றிய விவரங்களைப் பதிவுச் செய்வதில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

## வழிபாடு தலங்களில் நடைபெறும் அநீதிகள்!

பாஸ்கா திருவிழாவைக் கொண்டாடுவதற்கு எருசலேம் ஆலயத்திற்கு மக்கள் செல்வது வழக்கம். எருசலேம் ஆலயம் அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒரு நிர்வாகத்தைக் கொண்டிருந்தது என்றும் சொல்லப்படுகிறது. குறிப்பாக ஆலயத்திற்குப் பொறுப்பாக இருந்த தலைமை குருக்கள் பணம் கொடுத்து தலைமை குரு பதவியை அடைந்தார்கள் என்பது மறைக்கப்படவோ அல்லது மறுக்கப்படவோ முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலை இருந்துள்ளது. அதுமாத்திரம் அல்லாது, ஏழை எளியவர்களை கட்டாயப்படுத்தி காணிக்கை பொருள்களை அதிக விலைக்கொடுத்து வாங்கச் செய்தனர். சாதாரண பாமர மக்கள் மிகவும் அவதிக்குள்ளாயினர். அத்தகைய அநியாயத்தை எதிர்த்து புறப்பட்ட நிகழ்வைத்தான் இன்றைய நற்செய்தியில் இயேசு தூய்மை படுத்தும் ஆலயம். இந்தப் பெரிய ஆலயத்தில் பல்வேறு முறைகேடுகளும் நேர்மையற்ற செயல்களும் நடைபெற்றதால் தன் தந்தையின் இல்லத்தைச் சந்தை கூடமாக்கிவிட்டீர்கள். இறைவேண்டலின் வீட்டை கள்வர் குகையாக்கி விட்டீர்களே என்று பொறுமை இழந்து கோபப்பட்டு, வாணிபம் செய்தோரை சாட்டையால் விரட்டுகிறார். மேசைகளை தள்ளிவிடுகிறார். புறாக்களை மிருகங்களை அங்கிருந்து விரட்டுகிறார். “என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள்” என ஆவேசப்பட்டு விரட்டியடித்தார்.

இன்றைய சூழலில் புனித தலமாகக் கருதப்படும் வழிபாடு தலங்கள் மட்டுமல்ல நீதி, நேர்மை, உண்மை ஆகியவற்றிற்கு முன்மாதிரியாக திகழ வேண்டிய பொறுப்பாளர்களால் நிர்வகிக்கப்படும் விதம் மக்களின் நம்பிக்கையற்று விளங்குவதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதற்கு அடிப்படைக் காரணம், அங்கே லஞ்சமாக பணம் கொடுத்தால் எல்லாம் சாதித்துக் கொள்ளலாம் என்ற மனக்கோட்டையில் வாழும் பொறுப்பாளர்களை பற்றி நாம் அறிந்ததுதானே!

தகவல் ஊடகங்களில் பிரசுரமாகும் செய்திகள் அதுவும் முதல் பக்கச் செய்திகள் சுடச்சுட வாசிப்பது என்ன? அந்தப் பிரதமர் ஊழலில் சிக்கியுள்ளார். இந்தப் பிரதமர் ஊழலில் தண்டிக்கப்பட்டுட்டுள்ளார். அரசாங்க உயர் அதிகாரி கையூட்டு பெற்று கையும் களவுமாக பிடிப்பட்டார் எனும் இன்னும் பல செய்திகள் வந்த வண்ணமாகத்தான் இருக்கின்றன. தேவைப்படும் தேவைகளை பூர்த்தி செய்ய, நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் வழிகள் விரோதமான பாதைகளை அனுசரிப்பவர்களை நாம் எதிர்த்து நிற்கப்போகிறோமா?

ஆம், எதிர்த்து போராடியவர்களின் நிலை என்ன என அறிந்தவர்கள்தான் நாம். நீதிகேட்டு நெடும்பயணம் மேற்கொண்டவர்களின் நீதியின் தீர்ப்பும் உண்மையானதாக அமைந்திருந்ததையும் அறிந்தவர்கள்தான் நாம் எனவே, நீதி எது. அநீதி எது என்று அறிந்து மக்களுக்கு முன்னுரிமை வழங்க குரல் கொடுப்போருக்கு ஆதரவு கொடுப்போம்.

- ஆ.வி.டேவிட்

## தவக்காலம் 3 ஆம் ஞாயிறு

**வி.ப.: 20:1-17**
**திபா: 19: 7,8,9,10**
**1கொரி.: 1:22-25**
**யோவான்: 2:13-25**

**கவனத்திற்கு**

ஞாயிறு வாசகம்: ஆண்டு 2
வாரநாள் வாசகம்: ஆண்டு 2
திருபுகழ் மாலை - I